ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2471/14 - 2026 ජනවාරි මස 13 වැනි අඟහරුවාදා - 2026.01.13

2471/14 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DIVPG/LND/LA/AQURE/6/26.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2019/HW/160.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் பொல்கஹவலை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 891, மெதலஸ்ஸ கலுகமுவ கிராம அலுவலர் பிரிவில் உள்ள பொல்வத்தேகெதர கிராமத்தில் அமைந்துள்ள குருநாகல் மாவட்ட நில அளவையாளர் அதிபதி சார்பாக நில அளவையாளர் அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. 2380 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

**01. துண்டு இல. 55**

காணியின் பெயர்: இஹலவெல பில்லேவ; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: எஸ். பி. மாலனீ சுனில்வதீ; ஆரம்ப உரிமை கோருபவர்: - ; விஸ்தீரணம்: 0.0159 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பொல்கஹவலை பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும்படியும் மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர். எம். எஸ். என். ராஜபக்ஷ,
பிரதேச செயலாளர்,
பொல்கஹவலை.

பிரதேச செயலகம்,
பொல்கஹவலை,
2026, சனவரி 06.

EOG 01 - 0117